<u>கரூர் மாநகராட்சி</u>

**2024ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ம்தேதி திங்கள்கிழமை காலை 11.00 மணிக்கு கரூர் மாநகராட்சியின் மாமன்ற கூட்ட அரங்கில் அவசரக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் பின்வரும் பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும்.**

<u>பொருள்கள்</u>

**1)** வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தாம் முன் மொழிவாக உள்ள திர்மானம் கரூர் மாநகராட்சியில் தற்போது சுமார் 3 லட்சம் மக்கள் வசிக்கின்றனர் இந்திய அளவில் கரூர் மாநகரம் வீட்டு உபயோக துணி ஏற்றுமதி மூலம் அன்னியச்செலாவனி ஈட்டுத்தருவதில் முக்கிய நகரங்களில் ஒன்றாக விளங்குகிறது. மேலும் கரூர் மாநகரம், கரூர் மாவட்டத்தின் தலைநகரமும் ஆகும். இத்தகைய சிறப்பு வாய்ந்த கரூர் மாநகரில் பொதுமக்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் அரசு சார்பாக நீச்சல் குளம் ஏதுமில்லை. இதனால் பொதுமக்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் நீச்சல் கற்றுக்கொள்ள இயலாததுடன் மாநில மற்றும் தேதிய அளவில் நடைபெறும் நீச்சல் போட்டிகளில் கலந்து கொள்ள கரூர் மாநகராட்சி மக்களுக்கு வாய்ப்பு அமையவில்லை. எனவே கரூர் மாநகராட்சி பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் நீச்சல் கற்றுக்கொள்ளவும் மாநில மற்றும் தேசிய அளவில் நடைபெறும் நீச்சல் போட்டிகளில் கலந்து கொள்ள அதற்கான பயிற்சி களமாகவும் இருக்க வேண்டி மாவட்ட தலை நகரமான கரூர் மாநகராட்சியின் மையப்பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சி ஆண்கள் மேல் நிலைப்பள்ளி வளாகத்தில் காலியாகவுள்ள (வார்டு–1, பிளாக்–12, நகரளவு எண்.472/1, 474) இடத்தில் மாநகராட்சி மூலம் கல்வி நிதியிலிருந்து (Education Fund) நீச்சல் குளம் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மான எண்.2126** வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தாம் முன் மொழிவதாக உள்ள தீர்மானத்தில் மாவட்ட தலை நகரமான கரூர் மாநகராட்சியின் மையப்பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சி ஆண்கள் மேல் நிலைப்பள்ளி வளாகத்தில் காலியாகவுள்ள இடம் அல்லது பள்ளி வளாகத்தில் மிகவும் பழுதடைந்துள்ள பழைய முனிசிபல் ஹாஸ்டல் கட்டிடம் எவ்வித பயன்பாட்டிலும் இல்லாமல் காலியாக உள்ள பழைய கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு அவ்விடத்தில் பொதுமக்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் மாநகராட்சியின் கல்வி நிதியிலிருந்து நீச்சல் குளம் கட்டுவதற்கு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

**2)** மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள் தாம் முன் மொழிவாக உள்ள திர்மானம் கரூர் மாநகராட்சி பகுதியிலுள்ள பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் அரசு சார்பாக சறுக்கு விளையாடுமிடம் (Skating) ஏதுமில்லை. இதனால் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் சறுக்கு விளையாட்டு (Skating) கற்றுக்கொள்ள இயலாததுடன் மாநில மற்றும் தேதிய அளவில் நடைபெறும் சறுக்கு விளையாட்டு (Skating) போட்டிகளில் கலந்து கொள்ள வாய்ப்பு அமையவில்லை. எனவே கரூர் மாநகர் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் சறுக்கு விளையாட்டு (Skating) கற்றுக்கொள்ளவும் மாநில மற்றும் தேசிய அளவில் நடைபெறும் சறுக்கு விளையாட்டு (Skating) போட்டிகளில் கலந்து கொள்ள அதற்கான பயிற்சி களமாகவும் இருக்க வேண்டி அனைவரும் எளிதாக அணுகும் வகையில் வார்டு எண்.39ல் திருச்சி பிரதான சாலையையொட்டி காந்திகிராமம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள விளையாட்டு திடலின் (தாந்தோணி கிராமம் புல

எண்.355, 363) ஒரு பகுதியில் அரசிடமிருந்து நிதி பெற்று சறுக்கு விளையாட்டு தளம் (Skating) அமைக்க இம்மான்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மான எண்.2127** மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.ப.சரவணன் அவர்கள் தாம் முன்மொழிந்து திரு.ம.ராஜேந்திரன் 45வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3)திரு.பசுவை சக்திவேல் பொதுசுகாதாரக்குழு தலைவர்அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம். கரூர் மாநகராட்ச்சிக்குட்ப்பட்ட 1 முதல் 48 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கழிவு நீர் கால்வாய் சுத்தம் செய்யும் பணிக்கு ஒரு மண்டலத்திற்கு 40 பணியாளர் வீதம் நான்கு மண்டலத்திற்கு 160 பணியாளர்களை வெளிகொணர்வு முகமை மூலம் கடந்த 01.10.2023 முதல் பணி மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் 01.08.2024 முதல் 120 பணியாளர்களாக குறைக்கப்பட்டுள்ளதால் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் தொய்வு ஏற்பட்டு பொமக்களிடமிருந்து புகார்கள் வந்தவண்ணம் உள்ளதால் பொது சுகாதார பணியின் அவசரம் அவசியம் கருதி குறைக்கப்பட்ட 40 பணியாளர்களை உடனடியாக வெளிகொணர்வு முகமை மூலம் கழிவு நீர் கால்வாய் சுத்தம் செய்யும் பணிகளுக்கு ஒப்பந்தபுள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள இம்மாமன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மான எண்.2128** திரு.K.சக்திவேல் 17வது வார்டு வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திரு.M.தங்கராஜ் 18வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

4)கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –3 வார்டு எண்.18ல் அமைந்துள்ள அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு மாநகராட்சி மூலம் Bulk Water Supply Connection மூலம் நாள் ஒன்றுக்கு குடிநீர் 2 லட்சம் லிட்டர் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது குடிநீர் அளவீடு செய்யும் அளவுமானி பழுதடைந்து விட்டதால் புதிய அளவுமானி பொருத்துதல் மிகவும் அவசியமாகிறது. புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய டிஜீட்டல் அளவு மானி பொருத்துவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.10 லட்சத்தினை கரூர் மாநகராட்சிக்கு செலுத்த கோரி முதல்வர், அரசு மருத்துவ கல்லூரி அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேற்படி முதல்வர், அரசு மருத்துவ கல்லூரி, கரூர் அவாகளின் மூலம் 04.09.2024அன்று ரூ.2.10 இலட்சத்தினை இம்மாநகராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய டிஜீட்டல் அளவுமானி பொருத்தும் பணிக்கு முதன்முறையாக 29.11.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.2.10லட்சம்</u>

1. M/s.AS Power Solution, Trichy மதிப்பீட்டை விட0.05% சதம் குறைவு
2. M/s.ASV Construction, Trichy மதிப்பீட்டைவிட 5.00%சதம் அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.AS Power Solution, Trichy ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.2.10 லட்சத்தினை முதல்வர் அரசு மருத்துவகல்லூரி அவர்களிடமிருந்து பெறப்பட்ட தொகையிலிருந்து

மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/1539 /2024)

**தீர்மான எண்.2129** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**5)**கரூர் மாநகராட்சி மைய அலுவலகத்திலும், மண்டலம் –3 திண்ணப்பா நகர் பகுதியில் உள்ள மண்டல அலுவலகத்திலும் Bluenet IT Solutions Private Limited நிறுவனத்தின் முலம் பயன்படுத்தப்பட்டு வரும் இணையதள சேவைக்காக ( internet) மாதாந்திர சேவைக்கட்டணம் ஒரு வருடத்திற்கு கீழ்கண்டவாறு வரப்பெறும் என்று உதவி திட்ட கணிணி அமைப்பாளர் அவர்களின் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

| | | | |
|---|---|---|---|
| 1 | மெயின் ஆபிஸ் முழுவதும் 300 MBPS Speed | ரூ.13,000x12 | = 1,56,000/– |
| 2 | மண்டலம் –3 அலுவலகம் 50 MBPS Speed | ரூ.1500 x12 | = 18,000/– |
| | | Total | = 1,74,000/– |
| | | 18% GST | = 31,320/– |
| | கூடுதலாக உபகரணம், எதிர்பாரத செலவினம் | | 2,05,320/– |
| | ஆக ஒரு வருடத்திற்கு எதிர்பார்க்கும் செலவினம் | | 44,680/– |
| | Grant Total | | = 2,50,000/– |

எனவே கரூர் மாநகராட்சி மைய அலுவலகத்திலும், மண்டலம் –3 அலுவலகத்திலும் Bluenet IT Solutions Private Limited நிறுவனத்தின் மூலம் பயன்படுத்தப்பட்டு வரும் இணைய தள சேவைக்கான கட்டணம் ஒரு வருடத்திற்கு ரூ.2,50,000/–ல் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டபபடுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி அலுவலக பயன்பாட்டின் அவசர அவசியம் கருதி 15.05.2024 முதல் 14.11.2024 வரைக்கான சேவைக்கட்டணம் ரூ.1,05,610/–ஐ Bluenet IT Solutions Private Limited கரூர் அவர்களுக்கு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.2,50,000/–ஐ மாநகராட்சி வருவாய்நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(இ3/ 5143 /2021)**

**தீர்மான எண்.2130** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**6)**கரூர் மாநகராட்சிக்குட்பட் 16வது வார்டுக்குட்பட்ட இ.பி காலனி பிரதான சாலைஅப்துல் கலாம் நகர் பகுதியில் அமைந்துள்ள மின்மாற்றியை வடபுறம் உள்ள மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாக சுற்றுச்சுவர் ஒட்டி மாற்றும் பணிக்கான ரூ.500 பிரதான பத்திரம் (Identify bond) மற்றும் ரூ.2570/–ஐ பதிவு கட்டணம் செலுத்தக்கோரி தமிழ்நாடு மின்சாரவாரியம், தாந்தோணிமலைஅவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளது.

எனவே, கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் .3 வார்டு எண்.16 பகுதியில் இ.பி காலனி பிரதான சாலைஅப்துல் கலாம் நகர் பகுதியில் அமைந்துள்ள மின்மாற்றியை வடபுறம் உள்ள மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாக சுற்றுச்சுவர் ஒட்டி மாற்றி அமைத்து தரும் பணிக்கான ரூ.500 பிரதான பத்திரம் (Identify bond) மற்றும் பதிவு கட்டணம் ரூ.2570/–ஐ தமிழ்நாடு மின்சாரவாரியம், தாந்தோணிமலை அவர்களுக்கு செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலகக் குறிப்பு:**

1 மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.2570/—ஐ மாநகராட்சி வருவாய்நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/ 1433 /2022)

**தீர்மான எண்.2131** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

7)கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் —4 வார்டு எண். 36 திருமாநிலையூர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தென்மேற்கு பகுதியில் சுற்றுச்சுவர் கட்டும் இடத்தில் இடையூறாக உள்ள மின் கம்பம் stay வயர்களை மாற்றியமைக்கும் பணிக்கான மதிப்பீட்டு கட்டணம் ரூ.50,576/—ஐ செலுத்தக்கோரி தமிழ்நாடு மின்சாரவாரியம், தாந்தோணிமலைஅவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளது.

எனவே, கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் —4 வார்டு எண். 36 திருமாநிலையூர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தென்மேற்கு பகுதியில் சுற்றுச்சுவர் கட்டும் இடத்தில் இடையூறாக உள்ள மின் கம்பம் stay வயர்களை மாற்றியமைக்கும் பணிக்கான மதிப்பீட்டு கட்டணம் ரூ.50,576/—ஐ தமிழ்நாடு மின்சாரவாரியம், தாந்தோணிமலை அவர்களுக்கு செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.50,576/—ஐ மாநகராட்சி வருவாய்நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ1/ 1433 /2022

**தீர்மான எண்.2132** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

8)கரூர் மாநகராட்சி பொறியியல் பிரிவின் மூலமாக மேற்கொள்ளப்படும் திட்ட பணிகள், பொது நிதி பணிகள், குடிநீர் பணிகள், கல்வி நிதி பணிகளுக்கு தேவையான விலைப்புள்ளி அறிவிப்பு கடிதம் எடுக்கவும், வேலை உத்திரவு கடிதம் எடுக்கவும், மதிப்பீடுகளை எடுக்கவும், மாமன்றப்பொருள் எடுக்கவும், மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அலுவலகத்தின் மூலம் கேட்கப்படும் அறிக்கைகளை நகல் எடுக்கவும் மற்றும் குறிப்பாக அனைத்துப் பணிகளுக்கும் மதிப்பீடுகள் தயார் செய்து நகல் எடுப்பதற்கு ஜெராக்ஸ் மிசின் இல்லாத காரணத்தினால் பொறியியல் பிரிவின் பணியினை அத்தியாவசிய அவசியம் கருதி ஒரு ஜெராக்ஸ் மிசின் வாங்குவதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச செலவினத் தொகை ரூ.95000/—ஐ மேற்கொள்வதற்கும் நிதித்துறை அரசாணை எண்.94, நாள்.30.03.2024ன்படி, மேற்படி ஜெராக்ஸ மிசின் Gem Portal Rate ல் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்வதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலகக் குறிப்பு:**

1 மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.95,000/—ஐ மாநகராட்சி வருவாய்நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/5908/2024)

**தீர்மான எண்.2133** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

9)கரூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட ஆச்சிமங்கலம் கிராமம், புல எண்.26/1 பகுதி, 26/2, 27/1, 28—ல் பரப்பளவு 8.02 ஏக்கர் இடத்திற்கு விற்பனை செய்யப்பட்ட மனைகளை

வரன்முறைப்படுத்துவதற்கான வடிவமைப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை, திருச்சி அவர்களால் SPFW – 3557 என எண்ணிடப்பட்டு வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி வரன்முறைப்படுத்தப்பட்ட SPFW மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் தாந்தோணி மூன்றாம் நிலை நகராட்சியாக இருந்த பொழுது நன்கொடை ஆவணம் எண்.1652/2007, நாள்.06.09.2007ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு ஒப்படைப்பு செய்யப்பட்டபோது 35 அடி அகல சாலையில் கிழக்கு கடைசியில் தென்புறம் 36.25 அடி நீளம் வடபுரம் 40 அடி நீளம் அகலம் 35 அடி ஆக 1334.378 சதுரடி அல்லது 123.94 சதுர மீட்டர் சாலை மட்டும் ஒப்படைப்பு செய்யப்படாமல் விடுபட்டுள்ளது. தற்போது ஒப்படைப்பு செய்யாமல் விடுப்பட்டுள்ள 123.94 ச.மீ சாலையை ஒப்படைப்பு செய்வதாக நில உரிமையாளர் கோரியுள்ளார். எனவே நகர் ஊரமைப்பு துறையால் வரன்முறைப்படுத்தப்பட்ட மனை பிரிவு எண். SPFW – 3557ன் வரைபடத்தின்படி ஏற்கனவே சாலை பகுதிகளை ஒப்படைக்கப்பட்டது போக விடுபட்ட சாலை பகுதியான 123.94m2 இடத்தினை ஒப்படைப்பு செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( 5739/2024/எப்1)

**தீர்மான எண்.2134** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**10)**கரூர் மாநகராட்சி மண்டலம் **–3** வார்டு எண்.**12,17,19,39** ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி பகுதிகளில் உள்ள ஆழ்துளை தொட்டிகள் சில சமயங்களில் கழிவு நீரின் மூலம் உண்டாகும் வாயுக்கள் மூலம் சேதாரமாகிறது. மேலும் பிரதான குழாய்களும் அவ்வப்போது சேதாரமாகிறது. எனவே பாதாள சாக்கடை கழிவு நீர் தடைப்படாமல் சுத்திகரிப்பு நிலையத்திற்கு செல்லவும், பொதுமக்களின் சுகாதார நலன் கருத்தில் கொண்டும் பிரதான கழிவு நீர் குழாய்கள் மற்றும் பாதாள சாக்கடை மூடிகளை சீர் செய்து மாற்றியமைக்க மிகவும் அவசியமாகிறது. மேற்படி பராமரிப்பு பணிகள்மேற்கொள்ளும் பணிக்கு முதன்முறையாக **06.12.2024**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00லட்சம்**</u>

1. Thiru,P.Nallusamy. Karur, மதிப்பீட்டைவிட0. 02 %சதம் குறைவு
2. M/s.Krishna Traders, Karur மதிப்பீட்டைவிட 2.07 %சதம் அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Thiru,P.Nallusamy. Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகையை மாநகராட்சி வடிகால் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ5/ 815/2024)

**தீர்மான எண்.2135** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

11)கரூர் மாநகராட்சி மண்டலம் –2, வார்டு எண்.34 கூத்தரிசிக்காரத் தெருவில் மாநகராட்சிக்கு சொந்தமான பசுபதீஸ்வரா பெண்கள் மேல்நிலைப்பள்ளி உள்ளது. இப்பள்ளியில் கூத்தரிசிக்காரத் தெரு வழியாக ஒரே ஒரு மெயின் கேட் மட்டும் உள்ளது. மேற்கண்ட பள்ளிக்கு சென்று வர ஒரே வழி உள்ளதால் பள்ளி வேலை நேரங்களில் மாணவிகள் சென்று வர மிகவும் சிரமமாக உள்ளது. இந்நிலையில் ஜவஹர் பஜார் வழியாக இப்பள்ளிக்கு சென்று வர ஏதுவாக வழி அமைக்கும் பொருட்டு அந்த இடத்தில் ஒரு கடை இருந்தது. உயர்நீதிமன்ற உத்தரவு பேரில் கடை இடிக்கப்பட்டதால் அந்த வழியாக தனி வழியாக அமைத்தால் பள்ளி மாணவிகள் சென்று வர ஏதுவாக இருக்கும். எனவே ஜவஹர் பஜார் வழியாக வழி அமைக்கும் பணிக்கு முதன்முறையாக 06.12.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00லட்சம்</u>

1. M/s.Ramachandra Builders. Karur, மதிப்பீட்டைவிட 0.01 %சதம் குறைவு
2. M/s . Sunmathi Construction மதிப்பீட்டைவிட 0.00 %சதம் அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Ramachandra Builders. Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகையை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/ 5725 /2024)

**தீர்மான எண்.2136** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

12)கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –1,2,3 மற்றும் 4 ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 48 வார்டுகளில் பொதுமக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் தினந்தோறும் வணக்கத்திற்குரிய மேயர், துணை மேயர், ஆணையர், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் மூலமாக தினந்தோறும் நேரடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து மண்டலம் –1 வார்டு எண்.1 முதல் 11 வரை மற்றும் 28 ஆகிய பகுதிகளில் தற்போது மழைக்காலமாக உள்ளதால் சாலையின் ஓரங்களில் உள்ள வடிகால் பகுதிகளின் அருகில் செடிகள் மற்றும் புதர்கள் வளர்ந்துள்ளதால், பொதுமக்களுக்கு சுகாதார கேடு ஏற்படாதவண்ணமாக உடனடியாக புதர்களை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளதற்கிணங்க மேற்கண்ட வார்டு பகுதிகளில் தனியார் JCB இயந்திரம் மூலம் செடிகள் மற்றும் புதர்களை அகற்றும் பணிகளை மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1 மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

3 மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.5.00 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/5927 /2024)**

**தீர்மான எண்.2137** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**13)**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –1,2,3 மற்றும் 4 ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 48 வார்டுகளில் பொதுமக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் தினந்தோறும் வணக்கத்திற்குரிய மேயர், துணை மேயர், ஆணையர், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் மூலமாக தினந்தோறும் நேரடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து மண்டலம் –2க்குட்பட்ட வார்டு எண்.20 முதல் 27 வரை மற்றும் 29 முதல் 35 வரை உள்ள பகுதிகளில் தற்போது மழைக்காலமாக உள்ளதால் சாலையின் ஓரங்களில் உள்ள வடிகால் பகுதிகளின் அருகில் செடிகள் மற்றும் புதர்கள் வளர்ந்துள்ளதால், பொதுமக்களுக்கு சுகாதார கேடு ஏற்படாதவண்ணமாக உடனடியாக புதர்களை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளதற்கிணங்க மேற்கண்ட வார்டு பகுதிகளில் தனியார் JCB இயந்திரம் மூலம் செடிகள் மற்றும் புதர்களை அகற்றும் பணிகளை மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1 மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

3 மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.5.00 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்

**(இ1/5928 /2024)**

**தீர்மான எண்.2138** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**14)**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –1,2,3 மற்றும் 4 ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 48 வார்டுகளில் பொதுமக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் தினந்தோறும் வணக்கத்திற்குரிய மேயர், துணை மேயர், ஆணையர், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் மூலமாக தினந்தோறும் நேரடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து மண்டலம் –3க்குட்பட்ட வார்டு எண்.12,13,14,15,16,17,18,19,38,39,40,41 மற்றும் 42 ஆகிய பகுதிகளில் தற்போது மழைக்காலமாக உள்ளதால் சாலையின் ஓரங்களில் உள்ள வடிகால் பகுதிகளின் அருகில் செடிகள் மற்றும் புதர்கள் வளர்ந்துள்ளதால், பொதுமக்களுக்கு சுகாதார கேடு ஏற்படாதவண்ணமாக உடனடியாக புதர்களை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளதற்கிணங்க மேற்கண்ட வார்டு பகுதிகளில் தனியார் JCB இயந்திரம் மூலம் செடிகள் மற்றும் புதர்களை அகற்றும் பணிகளை மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1 மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

3 மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.5.00 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்

**(இ1/ 5929 /2024)**

**தீர்மான எண்.2139** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

15)கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –1,2,3 மற்றும் 4 ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 48 வார்டுகளில் பொதுமக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் தினந்தோறும் வணக்கத்திற்குரிய மேயர், துணை மேயர், ஆணையர், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் மூலமாக தினந்தோறும் நேரடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து மண்டலம் –4க்குட்பட்ட வார்டு எண்.36,37,43,44,45,46,47 மற்றும் 48 ஆகிய பகுதிகளில் தற்போது மழைக்காலமாக உள்ளதால் சாலையின் ஓரங்களில் உள்ள வடிகால் பகுதிகளின் அருகில் செடிகள் மற்றும் புதர்கள் வளர்ந்துள்ளதால், பொதுமக்களுக்கு சுகாதார கேடு ஏற்படாதவண்ணமாக உடனடியாக புதர்களை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளதற்கிணங்க மேற்கண்ட வார்டு பகுதிகளில் தனியார் JCB இயந்திரம் மூலம் செடிகள் மற்றும் புதர்களை அகற்றும் பணிகளை மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1 மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3 மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.5.00 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(இ1/ 5930/2024)**

**தீர்மான எண்.2140** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

16)கரூர் மாநகராட்சி மண்டலம் –3 வார்டு எண்கள் 12.13.14.15.16.17.18.19.38.39.40.41.42 ஆகிய பகுதிகளில் உள்ள சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள வேகத் தடைகளில் தற்போது வெள்ளைக்கோடுகள் காலப்போக்கில் அழிந்து விடுவதால் பொதுமக்கள் இரவு நேரங்களில் சாலையை பயன்படுத்தும் போது சிரமம் ஏற்படுகிறது. . மேலும் சாலை பாதுகாப்பு கூட்டம் வாயிலாகவும் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வேகத்தடைக்ளுக்கு மற்றும் சாலைகளில் வெள்ளை கோடுகள் அமைக்க அறிவுறுத்தப்பட்டதன் பேரிலும் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ. 5.00 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/5845 /2024)**

**தீர்மான எண்.2141** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

17)திருமதி.இந்திராணி பரமசிவம் 35வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

1. வளையல்காரதெரு, பொறிகார தெரு, தெற்குதெரு, அண்ணாஜி சந்து இந்த பகுதியில் கழிவு நீர் வாய்க்கால் தேங்கி தெருவில் கழிவு நீர் வெளியேறுகிறது இந்த பகுதியில் கல்வெட்டு அமைத்து தரவும்.

2. கிழக்கு வஞ்சியம்மன் கோவில் தெருவில் உள்ள அங்கன்வாடி மிகவும் மோசமான நிலையில் உள்ளது. குடிநீர் குழாய் இல்லை, அங்கன் வாடி மராமத்து வேலை செய்து தரவும்.
3. தெரு நாய்கள் அதிகமாக இருப்பதால் அதை பிடிக்க இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2142** திருமதி.இந்திராணி பரமசிவம் 35வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.ர.தெய்வாணை 34வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

18)திரு.அருள்மணி கனகராஜ் 19வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

கரூர் மாநகராட்சிக்குட்ப்பட்ட வார்டு எண்.19 ராமனூர் மெயின்ரோடு கோவில் அருகில் அடிக்கடி விபத்து ஏற்படுவதால் சென்டர் மீடியா புதிதாக கம்பம் அமைத்து ஹைமாஸ் லைட் அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2143** திரு.அருள்மணி கனகராஜ் 19வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திரு.ஏ.லாரன்ஸ் 20வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

19)திருமதி.சரண்யாகுழந்தைவேல் 13வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

13வது வார்டுக்குட்ப்பட்ட ராஜமுத்தையா காலனியில் உள்ள கழிவு நீர் சம்ப், குப்பைகள் மற்றும் மண் ஆகியவை தேங்கியுள்ளதால் அதிலுள்ள மோட்டார் அடிக்கடி பழுதடையும் மோட்டாருக்கு பதிலாக புதிய மோட்டார் மாற்றி தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2144** திருமதி.சரண்யாகுழந்தைவேல் 13வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.மஞ்சுளா பெரியசாமி 12வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

20)திருமதி.சரண்யாகுழந்தைவேல் 13வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

13வது வார்டுக்குட்ப்பட்ட பாரதியார் நகர் பகுதியில் மக்கள் பயன்படுத்திய சிறிய பாலம் சிதலமடைந்து உள்ளது. அதனை சரி செய்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2145** திருமதி.சரண்யாகுழந்தைவேல் 13வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.மஞ்சுளா பெரியசாமி 12வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

21)திரு.இரா.வேலுசாமி 48வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

கரூர் மாநகராட்சி 48 வார்டு வெங்க்கல்பட்டி பகுதியில் அமைந்துள்ள ஆரம்பப்பள்ளியின் சுற்று சுவர் இடிந்து பாதுகாப்பின்றி உள்ளதால் தெருநாய்கள் மற்றும் விஷ ஜந்துக்கள் பள்ளி பகுதிக்குள் வந்து விடுவதால் சுற்றுசுவர் அமைத்து குழந்தைகளுக்கு உரிய பாதுகாப்பு செய்து தருமாறும். பள்ளியின் முன்புறம் சத்துணவு கூடம் வரை மேடு பள்ளமாக

உள்ளதால் மழைநீர் தேங்கியுள்ளது. எனவே மேடு பள்ளத்தை சரி செய்து பேவர் பிளாக் அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2146** திரு.இரா.வேலுசாமி 48வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திரு.பெ.பழனிச்சாமி 47வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

22)திரு.பசுவை சக்திவேல் 17வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

1. 17வது வார்டில் செல்வநகர் பகுதியில் ஏற்கனவே கட்டப்பட்ட சமுதாயநலக்கூடம் பல ஆண்டு ஆகியதால் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளதால் புதிய சமுதாயநலக்கூடம் கட்டவும்.

2. பசுபதிபாளையம் பகுதியில் மமாநகராட்சி சார்பில் படிப்பகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த படிப்பக கட்டிடம் கட்டி பல ஆண்டுகள் ஆகிறது பழுதடைந்து மோசமான நிலையில் உள்ள இந்த கட்டிடத்தை இடித்துவிட்டு முதல் தளம், இராண்டாம் தளத்துடன் கூடிய புதிய கட்டிடம் கட்டி படிப்பகத்துடன் புதிய நூலகம் கிளை ஒன்று அமைத்து தரவும்.

3. 17வது வார்டடில் 6 நான்கு சாலை சந்திப்புகள் உள்ளது இந்த இடங்களில், மற்றும் 6 நுழைவு வாயிலில், 120 வாட்ஸ் பல்புகள் 12 அமைத்து தரவும்.

4. 17வது வார்டில் மின்விளக்கு இல்லாத ஐந்து மின் கம்பங்களில் ஐந்து மின்விளக்கு அமைக்க தரவும்

5. கரூர் மாநகராட்சி பசுபதிபாளையம் பகுதியில் வார்டு எண் 12,17,18,19 ஆகிய பகுதிகளில் சுமார் 30 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள் குடிநீர் விநியோகம் 8 நாட்களுக்கு ஒரு முறையும், சில நேரங்களில் சூழ்நிலை காரணமாக குடிநீர் விநியோகம் 15 நாட்கள் ஆகிறது. மேலும் எதிர் வரும் காலங்களில் மக்கள் தொகை கூடும் என்பதால் ராமானூர் தண்ணீர் டேங்கில் காலியாக உள்ள இடத்தில் புதிய தண்ணீர் டேங்க் ஒன்று கட்ட வேண்டும். மேலும் தற்போது உள்ள குடிநீர் திட்டம் 1 +10 தண்ணீர் வரத்து பற்றாக்குறையாக உள்ளதால் அவசியம் கருதி புதிய குடிநீர் திட்டம் உருவாக்க இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2147** திரு.K.சக்திவேல் 17வது வார்டு வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திரு.M.தங்கராஜ் 18வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

23)திரு.ம.சரவணன் 1வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

கரூர் மாநகராட்சிக்குட்பட்ட 48 வார்டுகளில் எனது 1வது வார்டு மிக பெரிய வார்டுகளில் ஒன்றாகும். இவ்வார்டில் வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள மிகவும் பின்தங்கிய மக்கள் அதிகமாக வசிக்கின்றனர். இவர்களது குடும்பங்களில் நடைபெறும் திருமண நிகழ்வுகளுக்கு தனியார் திருமண மண்டபங்களில் வாடகை கொடுத்து திருமண நிகழ்வுகள் நடத்த இயலாத நிலையில் உள்ளனர். எனவே வேறு மாநகராட்சிகளில் ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் இலவச திருமண மண்டபம் உள்ளதுபோல் 1வது வார்டிலும் அரசுக்கு சொந்தமான இனாம் கரூர் கிராமம், புல எண்.461ல் சுமார் 50 சென்ட் இடத்தில் மாநகராட்சி மூலம் அரசிடம் நிதி பெற்று இலவச திருமண மண்டபம் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2148** திரு.ம.சரவணன் 1வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன் மொழிந்து திரு.க.வடிவேல்அரசு 2வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

24)திருமதி.S.வளர்மதி 23வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

கரூர் மாநகராட்சிக்குட்பட்ட 48 வார்டுகளில் எனது 23வது வார்டு நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளது. இம்மாநகரில் வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள மிகவும் பின்தங்கிய மக்கள் அதிகமாக வசிக்கின்றனர். இவர்களது குடும்பங்களில் நடைபெறும் திருமண நிகழ்வுகளுக்கு தனியார் திருமண மண்டபங்களில் வாடகை கொடுத்து திருமண நிகழ்வுகள் நடத்த இயலாத நிலையில் உள்ளனர். எனவே வேறு மாநகராட்சிகளில் ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் இலவச திருமண மண்டபம் உள்ளதுபோல் 23வது வார்டிலும் அரசுக்கு சொந்தமான கரூர் நகரம், வார்டு–1, பிளாக்–50, நகளவு எண்.308/1ல் சுமார் 50 செண்ட் இடத்தில் மாநகராட்சி மூலம் அரசிடம் நிதி பெற்று இலவச திருமண மண்டபம் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2149** திருமதி.S.வளர்மதி 23வது வார்டு வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திரு.M.தங்கராஜ் 18வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

25)திரு.சு.மோகன்ராஜ் 44வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

கரூர் மாநகராட்சிக்குட்பட்ட எனது 44வது வார்டில் வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள மிகவும் பின்தங்கிய மக்கள் அதிகமாக வசிக்கின்றனர். இவர்களது குடும்பங்களில் நடைபெறும் திருமண நிகழ்வுகளுக்கு தனியார் திருமண மண்டபங்களில் வாடகை கொடுத்து திருமண நிகழ்வுகள் நடத்த இயலாத நிலையில் உள்ளனர். எனவே வேறு மாநகராட்சிகளில் ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் இலவச திருமண மண்டபம் உள்ளதுபோல் 44வது வார்டிலும் பொது மக்கள் எளிதாக அணுகும் வகையில் பழைய திண்டுக்கல் பிரதான சாலையையொட்டி அமைந்துள்ள அரசுக்கு சொந்தமான தாந்தோணி கிராமம், புல எண்.582 பகுதி மாநகராட்சி மூலம் அரசிடம் நிதி பெற்று இலவச திருமண மண்டபம் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2150** திரு.சு.மோகன்ராஜ் 44வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன் மொழிந்து திரு.ம.ராஜேந்திரன் 45வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

26)கரூர் மாநகராட்சி மண்டலம் –1,2,மற்றும் 3க்குட்பட்ட கீழ்கண்ட 12 இடங்களில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் அவர்களால் 15.12.2024 அன்று பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெறும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | இடம் |
|---|---|---|
| 1 | 38 | மெடிக்கல் காலேஜ் மாரியம்மன் கோவில் அருகில் |
| 2 | 19 | ராமானுார் திடல் |
| 3 | 18 | வெற்றி தியேட்டர் அருகில் |
| 4 | 17 | உதயநிதி திடல் பசுபதிபாளையம் |
| 5 | 12 | வடக்குத் தெரு, பசுபதிபாளையம் |
| 6 | 11 | பாலம்மாள்புரம் |
| 7 | 20 | வாசுகி மஹால், வ.ஊ.சி தெரு |
| 8 | 21 | மாரியம்மன் கோவில் அருகில் |
| 9 | 35 | கீரைக்காரத்தெரு |

| | | |
|---|---|---|
| 10 | 34 | மக்கள் பாதை |
| 11 | 33 | படிகட்டுத்துறை |
| 12 | 32 | முத்துராஜபுரம் கோவில் அருகில் |

மேற்கண்ட 12 இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு வருகை புரியும் பொதுமக்களுக்கு தேவையான சாமியானா பந்தல் அமைத்தல், மேடை அமைத்தல், சேர் வசதிகள், தரைவிரிப்பு, ஒலிபெருக்கி, குடிநீர் வசதிகள் ஆகிய பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரு.4.20 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1 மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

3 மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.4.20 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்

**(இ1/5736 /2024)**

**தீர்மான எண்.2151** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

27)கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –1 ,2,3 மற்றும் 4 ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட 1 முதல் 48 வார்டுகளில் பொதுமக்களின் அத்தியாவசிய குடிநீர் பணிகளையும், சாலை பணிகளையும் மேற்கொள்வதற்கு 2024–2025ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட அறிக்கையில் கீழ்கண்ட கணக்கு குறியீட்டு எண்களில் போதுமான நிதி இருப்பில் இல்லை. ஆதலால் பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்வதற்காக கீழ்கண்ட 2024–2025ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட அறிக்கையில் கீழ்கண்ட இனங்களுக்கு மதிப்பீடு தயார் செய்து மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வருவாய் நிதி | | | |
|---|---|---|---|
| **வ.எண்** | **கணக்கு குறியீட்டு எண்** | **கணக்கு தலைப்பு** | **2024–2025 வரவு செலவு மதிப்பீடு (ரூபாய் லட்சங்களில்)** |
| 1 | 2305001 | தார்சாலை, நடைபாதை மராமத்து மற்றும் பராமரிப்பு | 25.00 |
| **குடிநீர் நிதி** | | | |
| 1 | 4121001 | குடிநீர் திட்ட பணிகள் | **100.00** |

**அலுவலக குறிப்பு:**

1 பதிவு செய்யலாம். **( பி1/11028 /2024)**

**தீர்மான எண்.2152** பதிவு செய்யப்பட்டது

மேயர்
கரூர் மாநகராட்சி